©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 49] CHENNAI, WEDNESDAY, DECEMBER 6, 2017
Karthigai 20, Hevilambi, Thiruvalluvar Aandu–2048

## Part VI—Section 1

**Notifications of interest to the General Public issued by Heads of Departments, Etc.**

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

**CONTENTS**

*Pages*

GENERAL NOTIFICATIONS

**1983–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு **14(1)–**ன் கீழ் அறிவிக்கை **..** 352-353

Variations to the Approved Master Plan for Thanjavur Local Planning Area. .. .. .. 353-354

NATIONAL HEALTH MISSION TAMIL NADU

Final List of Valid Nominees .. .. .. .. .. .. 354

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

GENERAL NOTIFICATIONS

*(ந.க.எண் 140283/2007/திகசூப1)*

**1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 14(1)—ன்கீழ் அறிவிக்கை**

No.VI(1)/349/2017.

கூட்டுறவு இயக்கத்தின் நலன் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கூட்டுறவு மேலாண்மை நிலையங்களை செம்மையாக நடத்திடவும், தற்போது தனித்தனியாக செயற்பட்டு வரும் சாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் T.575 தஞ்சாவூர், இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலையம் K.891 கோயம்புத்தூர், பாண்டியநாடு கூட்டுறவு மேலாண்மை நிலையம் A.2429 மதுரை, நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் S.1326 சேலம், பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையம் G.1723 காஞ்சிபுரம், வேலூர் கூட்டுறவு மேலாண்மை நிலையம் C.2331 வேலூர், மேடை தளவாய் குமாரசாமி கூட்டுறவு மேலாண்மை நிலையம் O.2045 திருநெல்வேலி, தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையம் RA.413 சாத்தூர், டாக்டர் எம்.ஜி.ஆர். கூட்டுறவு மேலாண்மை நிலையம் FC.2863 கடலூர், தருமபுரி கூட்டுறவு மேலாண்மை நிலையம் DD.170 மொரப்பூர், நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் KN.108 நாகர்கோவில் ஆகிய 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களையும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தையும் XNC.878 ஒரே சங்கமாக "தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்" என்ற பெயரில் ஒருங்கிணைக்கப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியமானது எனக் கருதி, 1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 14—ன்கீழ் பிறப்பிக்கப்படவுள்ள உத்தேசிக்கப்பட்ட வரைவு ஆணையின் நகல் மேற்சொன்ன 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கும் ந.க. 140283/2007 திகசூப1, நாள் 18—02—2008ல் அனுப்பப்பட்டுள்ளது. அதில் கேட்டுக் கொண்டபடி, பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்ட வரைவு ஆணையின் நகல் அல்லது அதன் சாராம்சத்தை மேற்படி 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மற்றும் அந்தந்த சங்கத்திற்கு கடன் கொடுத்தவர் ஒவ்வொருவருக்கும் தெரிவித்து, அந்த உறுப்பினர்கள் அல்லது கடன் கொடுத்தவர்கள் அவர்களுடைய மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் யாதேனும் இருப்பின் அதனை இரண்டு மாத காலக் கெடுவுக்குள் தெரிவிக்கும்படி கோரியிருந்தனர்.

**2.** பத்தி (1)—ல் குறிப்பிட்டுள்ள 11 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும் உத்தேசிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டம் தொடர்பாக அவற்றின் உறுப்பினர்கள் அல்லது கடன் கொடுத்தவர்களிடமிருந்து கருத்துரை அல்லது மறுப்புரை எதுவும் பெறப்படவில்லை எனத் தெரிவித்து உத்தேசிக்கப்பட்ட ஒருங்கிணைப்புக்கு அவற்றின் இசைவினையும் தெரிவித்துள்ளன. ஆனால், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் உறுப்பினராயுள்ள தமிழ்நாடு கூட்டுறவு மாநில விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனி அலுவலர்/தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலருக்கு 25—04—2008 தேதியிட்டு எழுதி பதிவாளருக்கும், கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி)—க்கும் நகலிட்டுள்ள நேர்முகக் கடிதத்தில் உத்தேசிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு தொடர்பாக சில கருத்துரைகள் தெரிவித்து தெளிவுரை கோரியிருந்தார். அவரின் கருத்துரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு அவற்றிற்கு ந.க. 140823/2007/திகசூப1, நாள் 17—06—2008—ல் தெளிவுரைகள் வழங்கப்பட்டன. அதுவன்னியில், 11 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய உறுப்பினர்கள் அல்லது கடன் கொடுத்தவர்கள் வேறு எவரிடமிருந்தும் சட்டப்பிரிவு 14(1)—ன்கீழ் பிறப்பிக்க கருதப்பட்டுள்ள ஆணையின் மீது மறுப்புரை எதுவும் நாளது தேதி வரை கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி) அவர்களுக்கு எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் பெறப்படவில்லை. உத்தேசிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியம் என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி) ஆகிய நான் மனநிறைவு அடைந்துள்ளேன்.

**3.** அரசாணை (2டி) எண் 108, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 31—08—2005—ல் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 14—ஐ பொறுத்த வரையில் பதிவாளருக்குள்ள அதிகாரம் கூடுதல் பதிவாளருக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே பதிவாளர் அலுவலகக் கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி) ஆகிய நான் 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 14(1)—ல் வரையறுக்கப்பட்ட பதிவாளரின் அதிகாரத்தை செயற்படுத்தி சாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் T. 575 தஞ்சாவூர், இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலையம் K.891 கோயம்புத்தூர், பாண்டியநாடு கூட்டுறவு மேலாண்மை நிலையம் A.2429 மதுரை, நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் S.1326 சேலம், பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையம் G.1723 காஞ்சிபுரம், வேலூர் கூட்டுறவு மேலாண்மை நிலையம் C.2331 வேலூர், மேடை தளவாய் குமாரசாமி கூட்டுறவு மேலாண்மை நிலையம் O.2045 திருநெல்வேலி, தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையம் RA413 சாத்தூர், டாக்டர் எம்.ஜி.ஆர் கூட்டுறவு மேலாண்மை நிலையம் FC 2863 கடலூர், தருமபுரி கூட்டுறவு மேலாண்மை நிலையம் DD170 மொரப்பூர், நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் KN 108 நாகர்கோவில் ஆகிய 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களையும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தையும் XN.C. 878 (இதன் பிறகு முந்தைய சங்கங்கள் என அழைக்கப்படும்) ஒருங்கிணைத்து புதிய சங்கமாக புதிவு செய்து சென்னையை தலைமையிடமாகக் கொண்டும், தமிழ்நாடு முழுவதும் செயல் எல்லையாகக் கொண்டும் "தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்" என்ற பெயரில் (இதன் பிறகு ஒருங்கிணைக்கப்பட்ட சங்கம் என்று அழைக்கப்படும்) செயல்பட ஆணை பிறப்பித்துள்ளேன்.

**4.** இந்த ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடு நாளது தேதியில் பதிவு செய்யப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத் துணை விதிகளில் கண்டுள்ளவாறு இருக்கும். முந்தைய சங்கங்களின் சொத்துக்கள் உரிமைகள், பத்திரங்கள், முதலீடுகள், நலன்கள், காப்பீடுகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக நிலை பெறும். ஒருங்கிணைக்கப்பட்ட நாளன்று உள்ள முந்தைய சங்கங்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியது ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத்தின் பொறுப்பு ஆகும். ஒருங்கிணைக்கப்பட்ட சங்கமே அவற்றை தீர்க்க வேண்டும் அல்லது நிறைவேற்ற வேண்டும் என ஆணையிடப்படுகிறது. முந்தைய சங்கங்களில் உறுப்பினராய் இருந்த அனைத்து தொடக்க சங்கங்கள்

மற்றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் நீங்கலாகவுள்ள அனைத்து மைய சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத் துணைவிதி 4(aa)-ன்படி ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத் துணை விதிகள் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட சங்க உறுப்பினர்களாய் இருப்பது அற்றுப் போகும் என்பதால் அவற்றின் பங்குத் தொகையை ஒருங்கிணைக்கப்பட்ட சங்கம் உடனடியாக திரும்ப வழங்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

5. ஒருங்கிணைக்கப்பட்ட 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும் தற்போது தனி அலுவலர்களின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத்தின் நிருவாகம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 89(1)—ன்கீழ் நியமிக்கப்பட்டு தற்போது பதவியிலிருக்கும் தனி அலுவலரிடம் தொடர்ந்து இருக்கும்.

6. ஒருங்கிணைக்கப்பட்ட 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆகியவற்றில் முறையாக பணியமர்த்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட நாளன்று பணிபுரிந்து வரும் பணியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்ட புதிய சங்கத்தின் பணியாளர்களாகக் கருதப்பட்டு, தொடர்ந்து பணியில் இருப்பார்கள். ஒருங்கிணைக்கப்பட்ட முந்தைய சங்கங்களிலும் (11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களிலும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலும்) ஒருங்கிணைக்கப்பட்ட நாளன்று அயற்பணியில் இருக்கின்ற அரசு அலுவலர்கள், அரசு இனி பிறப்பிக்கும் ஆணைகளுக்குட்பட்டு, அந்தந்த பணியிடங்களிலும் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள பணிக்காலம் முடிவுறும் வரை தொடர்ந்து பணியில் நீடிப்பார்கள் என்றும் இவர்களில் ஒப்பந்தப் பணியாளர்கள், தற்காலிகப் பணியாளர்கள் யாரேனும் இருப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட சங்கம் இனி பிறப்பிக்கும் ஆணைகளுக்குட்பட்டு அவர்கள் அந்தந்தப் பணியில் நீடிப்பார்கள் என்றும் ஆணையிடப்படுகிறது. ஆனால் முந்தைய சங்கங்களின் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள் மற்றும் பணி நிபந்தனைகள் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத்திற்கென புதியதாக பணியாளர்கள் சிறப்புத் துணை விதிகள் ஏற்படுத்திக் கொள்ளும் வரை ஒருங்கிணைக்கப்பட்ட நாளுக்கு முந்தைய நாளில் அமுலில் இருந்த அந்தந்த கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பணியாளர்கள் சிறப்புத் துணை விதிகளின்படி அல்லது ஊதிய ஒப்பந்தப்படி தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் ஆணையிடப்படுகிறது.

இவ்வாணை 2008 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் எனது கையொப்பத்துடன் அலுவலக முத்திரையிட்டு வழங்கப்படுகிறது.

சென்னை—10,
2008, ஜூலை 1.

**எல். சித்திரசேனன்,**
*கூடுதல் பதிவாளர்,*
*(விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி).*

சென்னை—10,
2017, நவம்பர் 7.

**அ. ஞானசேகரன்,**
*கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.*

## Variations to the Approved Master Plan for Thanjavur Local Planning Area.

*(Roc. No. 27/2015/TLPA)*

No.VI(1)/350/2017.

In exercise of the powers conferred by sub-section (4) of Section 32 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) and also in exercise of powers conferred by G O. Ms.No. 94, Housing and Urban Development [UD(4)1] Department dated 12-06-2009 published in *Tamil Nadu Government Gazette* No. 27, Part II—Section 2, in Page No. 228, dated 15-07-2009, after getting the approval from the Government *vide* G.O.(2D) No.138 Housing and Urban Development Department dated: 21-7-2017 the following variations are made to the Master Plan for Thanjavur Local Planning Area approved under the said Act and published in the Housing and Urban Development Department Notification at Page No. 879 of Part VI—Section 2 of *Tamil Nadu Government Gazette,* date, 11th October 1995.

### Variations

In the land use Schedules of the said Master Plan, under the heading "Thanjavur Master Plan – Zoning Schedules" under the heading;

1. Residential use zone-I (a) Primary Residential use zone, the S.F.No. 111 part appears against the Zoning No.PR-4, shall be deleted and replaced as 111pt except 111/1.

2. Residential use zone–I (b) Mixed Residential use zone, the S.F.No.111pt appears against the Zoning No.MR-2, shall be deleted and replaced as 111pt except 111/1.

3. Proposed Road (100'0'' wide), the S.F.No.111pt appears against the Village 107 Nilagiri Therku Thottam Village shall be deleted and replaced as 111/1 part.

4. V Public and Semi-Public use zone, below the Zoning No.PS-7, a new row shall be introduced in which PS-7A 107 Nilagiri Therku Thottam Village and S.F.No. 111Pt (111/1) shall be added against the Zoning Number, Village Number and S.F.Number respectively.

Thanjavur,
29th November 2017.

K. MOOKAIAH,
*Member-Secretary (Incharge),*
*Thanjavur Local Planning Authority.*

NATIONAL HEALTH MISSION TAMILNADU

ELECTION OF ONE MEMBER SIDDHA TO CENTRAL COUNCIL OF INDIAN MEDICINE IN TAMIL NADU-2017.

**Final List of Valid Nominees**

*(Ref. No. 1114/SHS/E/16)*

No. VI(1)/351/2017.

| *Sl. No.* | *Name of the Nominees and Address* | *Registration No.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | டாக்டர். பத்மராம்சந்திரா, எல்., பி.எஸ்.எம்.எஸ்.,<br>Dr. Padmaramchandra, L., B.S.M.S.,<br>S/o. R. Lakshmana Chandra, No. 10/42, Chandra Vilas,<br>West Neyyoor Post, Kanyakumari-629 803. | 2231 |
| 2. | டாக்டர். ஸ்ரீராம், ஜே., எம்.டி. (சித்தா),<br>Dr. Sriram, J., MD(S), S/o. S. Jayaraj, No. 7/256-C,<br>Keezhavannavilai, Near N.G.O. Colony, Nagercoil,<br>Kanyakumari-629 002. | 467 |
| 3. | டாக்டர். தமிழழகன், வி., பி.எஸ்.எம்.எஸ்.,<br>Dr. Tamilalagan, V., B.S.M.S., S/o. K. Vedigounder,<br>No. 242/8 (162/8), Mangalam Colony,<br>Thirumangalam, Chennai-600 040. | 4910 |

Chennai-600 006,
28th November 2017.

Dr. DAREZ AHAMED,
*Returning Officer,*
*Central Council of Indian Medicine (Siddha),*
*Election and Mission Director,*
*State Rural Health Mission.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU